This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஒரு கதையில் இரண்டு கதைகள்!

www.writersujatha.com

**முதல் கதை :**

இரவு. தீப்பந்தங்கள். பல்லக்கு. அதைச் சுமப்பவர்களின் ‘ஹை ஹோ...’ பல்லக்கின் திரைச்சீலையின் மெல்லிய காற்றின் அலைச்சல். மத்தியில் சந்திரோதயம் போல், ரத்தினம் போல், சோலையிளந் தென்றல் போல், சோமரசக் கவிதை போல் இளவரசி மேகலா.

சோழர்கள் சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகிப் போய் சில நூறு வருடங்களுக்குப் பின்னர் எஞ்சியிருந்த ஒரே பகுதியை ஆண்ட–மிச்சமிருந்த ஒரு சோழனின் ஒரே மகள்.

(சோழனுக்கு மற்றொரு மகளும் உண்டு என்று பேச்சு. இதை அந்தச் சோழன் ஒப்புக்கொண்டதில்லை. ஊர் வாய்!)

இளவரசியின் கையில் ஓலை இருந்தது. ஒரு மடல்! அதை மடல் என்ற சொல்வதா, காதல் கடல் என்று சொல்வதா? எழுத்தாணியை இதயத்தில் தோய்த்து, தேவநாதன் எழுதியிருந்தான்!

> *அனபுக கரஙகளை அனறுதினநதொடடென இனபக கரைதான கணடேன – உன பககம தாமரையு முகநாணும சநதிரனு முகமவாடு மாமதனிலே சநதேகமிலை.*

(அந்தக் காலத்தில் ஒற்றெழுத்துக்கள் எழுதுவது கிடையாது!)

– என்று நேரிசை வெண்பாவில் துவங்கி ‘வேறு’ என்று விருத்தத்திலும் விளையாடியிருந்தான், தேவநாதன்.

இளவரசி ஓலையை இரண்டாம் முறை படித்தாள் – முதல் முறை படித்தபோது சரியாகப் புரியாததால். எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் மலிந்திருந்த அந்த லிகிதம் அவளுக்கு ஓர் அலட்சிய முறுவலைத்தான் தந்தது. “செங்கல்” என்று விளித்தாள்.

“இளவரசி!” என்று பல்லக்கின் அருகில் வந்து பணிவுடன் நடந்தார் செங்கல்வராய தேவர் – அரசின் மெய்க்காப்பு, நெய்ப்பந்தப் பிரிவுகளின் தலைமை அதிகாரி. திங்களுக்குத் திங்கள் முப்பது வராகன் வாங்குகிற அதிகாரி.

அவர் கையிலிருந்த பந்தத்தில் அந்த ஓலையைக் கொளுத்தினாள் இளவரசி. “பித்துப் பிடித்தவன்” என்றாள்.

“இளவரசி! இன்னும் இரண்டு நாழிக்குள் வரகூர் போய்ச் சேர்ந்துவிடலாம்,” என்றார் செங்கல்வராய தேவர். அவர் சொன்னதை இளவரசி கவனித்தாளில்லை. அவள் மனம்